**OPEN ACCESS**

Manuscript ID: TAM-05032021-3642

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.10.2020

Accepted: 10.11.2020

Published: 01.01.2021

Citation: Chandrasekaran, M. "Interpersonal Attraction View on Purananooru." *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 3, 2021, pp. 53–63.

DOI: https://doi.org/10.34293/tamil.v5i3.3642

*Corresponding Author: chandruchellam19@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Interpersonal Attraction View on Purananooru

**Dr. M. Chandrasekaran**
*Post Doctoral Fellow, Department of Tamil Studies*
*Bharathidasan University, Tiruchirappalli, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-6224-9691

**Abstract:** Literature deals with the social biology of humanbeings. Society is made by humanbeings. It faces various evolutions when humans interact with each other. Social psychology explores how human behaviour shaped by family and society. Social Interaction is also one of the Psychological studies. Social Interaction is an intrinsic existence. Intrinsic existence is related to how one likes and differs from one another. In these contexts, the social psychologist has an innate acceptance of Characteristics of the individuals, Characteristics of others, fit between us, Situational influences. Review this article through Purananooru.

**Key Words:** Sangam Literature Purananuru, Literature, Society, Social Psychology,Social Interaction, Interpersonal Attraction, Fit between us, Situational Influence.

**References**

1. Argyle M. (2017). *Social Interaction : Process and products*, Rouledge.
2. Aronson Elliot, Wilson Timothy D, Akert Robin M. (2007) *Social Psychology* (6th Ed), New Jersey : Upper saddle River.
3. Bhathavatsala Bharathi S. (2018). *Panpaatu Maanitaviyal*, Puthanatham: Adaiyaalam.
4. Sharon S. Brehm. and Saul M. Kassm. (1996). *Social Psychology (Third Edition)*, Boston Toronto: Houghton Mifflin Company.
5. Avvai Duraisamy Pillai S. (2017), *Purananooru Mollamum Uraiyum* (Vol. 1, 2), Chennai: Thirunelveli, Saiva Sithandham Noorpathippu Kazhagam.
6. Somasundaranar P.V. *Patthupattu Mollamum Uraiyum*, Chennai, Kazhaga Veliyeedu.
7. Paramesh SR. (2018). *Social Psychology*, Chennai: TamilNadu Textbook and Educational Service Corporation.
8. Vazhviyalkalanchiyam (vol.8), Thanjavur : Tamil University.

# புறநானூற்றில் உள்ளார்ந்த ஈர்ப்பு

***முனைவர் ம. சந்திரசேகரன்***
முனைவர் பட்ட மேலாய்வாளர், தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச் சுருக்கம்:*** *இலக்கியம் மனிதர்களின் சமூக வாழ்வியலை இயம்புகிறது. சமூகம் என்பது மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டதாகும். இச்சமூகம், மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்கின்ற போது பல்வேறு பரிணாம வளர்ச்சியினை அடைகிறது. ஒரு மனிதனின் நடத்தை முறைகள் குடும்பம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் எவ்வாறு அமைகின்றன என்பதை சமூக உளவியல் ஆராய்கிறது. சமூக உளவியல் ஆய்வில் சமூகத் தொடர்பாய்வும் ஒன்றாகும். சமூகத் தொடர்பாய்வு வகைமைகளில் ஒன்று உள்ளார்ந்த ஈர்ப்பு. உள்ளார்ந்த ஈர்ப்பு என்பது ஒருவரை ஒருவர் எவ்வளவு விரும்புகிறார்கள், வெறுக்கிறார்கள் என்பதோடு தொடர்புடையதாகும். இதனடிப்படையில் சமூக உளவியலாளர்கள் தனி மனிதப் பண்பு, பிறருடனான பண்பு, தங்களுக்கிடையேயான இணக்கம், சூழலின் தாக்கம் எனும் நிலையில் உள்ளார்ந்த ஈர்ப்பினை ஆராய்வர். இவ் ஆய்வினைப் புறநானூறு வழி இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *இலக்கியம், சங்க இலக்கியம், புறநானூறு, சமூகம், சமூக உளவியல், சமூகத் தொடர்பு, உள்ளார்ந்த ஈர்ப்பு, இணக்கம், சூழலின் தாக்கம்.*

சமூகம், மனிதனின் சமூக உறவுகளிலிருந்து தோன்றுகிறது. உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் மனிதர்கள் அவ்வுறவுகளை நிலைப்படுத்தி, முறைப்படுத்தித் தங்களுக்குள் ஓர் அமைப்பை, அனைவரும் கூடி வாழக்கூடிய நிலையினை ஏற்படுத்திக்கொள்ளும்போது சமூகம் பிறக்கிறது.

மனிதர்கள் தேவையின் காரணமாகத்தான் தங்களுக்குள் ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு கூடி வாழ்கிறார்கள். இக் கருத்தைப் பிளேட்டோ என்ற அறிஞரும் வலியுறுத்துகிறார். இக்கருத்தையே, புனித தாமசு அக்கினசு என்ற அறிஞர், “மனிதன் தன்னுடைய பற்றுகளைத் தனித்திருந்து தன்னிச்சையாக அடையமுடியாது. பிறருடைய துணை, ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே அடையமுடியும். எனவே, இவற்றைப் பெற மனிதன் பிறரோடு சேர்ந்து சமூகத்தை அமைத்துக் கொள்கிறான்” என மொழிகிறார் (வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி எட்டு, பக். 588 - 590).

அரிசுடாட்டில் “மனிதனுக்குச் சமூகவியல்பு இயற்கையிலேயே இருக்கிறது. இந்தச் சமூகவியல்பு காரணமாக அவன் பிறரோடு கூடிப் பழகுகிறான். அவ்வாறு பழக முற்படும்போது சமூகம் தோன்றிவிடுகிறது” என்கிறார் (மேலது, ப. 590).

## சமூகத் தொடர்பு

சமூகத் தொடர்பு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு இடையிலான ஒரு சமூகப் பரிமாற்றமாகும். இத்தொடர்புகள் சமூகக் கட்டமைப்பிற்கு அடிப்படையாக அமைகின்றன. எனவே, இஃது அடிப்படைச் சமூக விசாரணை

மற்றும் பகுப்பாய்விற்கு முக்கிய பொருளாக விளங்குகிறது.

செ.ரா. பரமேசு, "சமூகத்தில் நாம் மூன்றுவிதமான அடிப்படை வழிகளில் பிறருடன் தொடர்பு கொள்ளுகிறோம். நாம் ஒருவரோடு ஒட்டி உறவாடி, நெருங்கிப்பழகி அவர்களின்பால் ஒன்றிய சமூகத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். அல்லது அவர் நம் கருத்துகளுக்கும் அடிப்படை மனப்போக்கிற்கும் மாறுபட்டவராகக் காணப்பட்டால் அவரிடமிருந்து முடிந்த அளவு தனித்து இருப்பதற்கும், விடுபட்டுக் கொள்வதற்கும் முயற்சிக்கலாம். இங்கே நாம் பிறரிடமிருந்து விலகுவதில் அல்லது அவர் தம் தொடர்பினைத் துண்டித்துக் கொள்வதில் நாட்டம் உள்ளவராகச் செயல்படுகிறோம். அவரிடம் நேரிடையாக அன்றி எதிர்மறையாகத் தொடர்பு கொள்ளுகின்றோம். மூன்றாவது வகையில் நமக்குப் பிடிக்காத ஒருவரின்பால் எதிர்த்தே செயல்பட்டு அவருக்கு எதிர்ப்பாகவே இயங்கத் தொடங்கு கின்றோம். இங்ஙனம் நாம் ஒருவரின் பால் ஒட்டி உறவாடுதலின் வழி, அவரிடமிருந்து தனித்து, விலகிக்கொள்ள முயற்சித்தலின் வழி, அல்லது அவரோடு எதிர்ப்புகொண்டு அவருக்கு எதிராகவே எதையும் செய்வதின் வழி ஆக இம்மூன்று வழிகளின் மூலம் நாம் நம்மைச் சார்ந்துள்ள சமூகத்தில் வாழ்கின்ற பிறரோடுதொடர்பு கொள்ளுகின்றோம்" என்கிறார் (சமூக உளவியல், ப. 295).

சமூகக் கட்டமைப்புகள் மற்றும் கலாச்சாரங்கள் சமூகத் தொடர்புகளின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன. ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதன் மூலம் மக்கள் வாழ விரும்பும் விதிகள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை வடிவமைக்கிறார்கள். சமூகத் தொடர்பு களின் ஆய்வு என்பது சமூகவியல் பாடங்களில் ஒன்றாகும்.

சமூக உறவு என்பது மக்கள் ஒருவருக்கொருவர் பேசுதல், செயல் படுதலைச் சார்ந்ததாகும். இது குழு, குடும்பம் அல்லது அதிகாரத்துவத் தின் தொடர்புகளை உள்ளடக்கியிருக்கும். எனவே, இதில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு இடையிலான எந்த உறவும் அடங்குகிறது. இஃது சமூகமயமாக்கலின் மூலமாகக் கருதப் படுவதால், அனைத்து வகையான சமூக உறவுகளையும் வகைப்படுத்துகிறது (Argyle, M. 2017. Social Interaction: Process and products. Rouledge).

கிசு மற்றும் என்.பி, "சமூகத் தொடர்பு என்பது மனிதர்கள் ஒருவருக்கொருவர் தூண்டுதல் மற்றும் பதிலளிப்பதன் மூலம் செலுத்தும் பரஸ்பர செல்வாக்கு" என்கின்றனர் (மேலது,).

சமூகத் தொடர்பாய்வினை,

1. உள்ளார்ந்த ஈர்ப்பு (Interpersonal Attraction)
2. நெருக்கமான உறவு (Intimate Relationship)
3. பிறருக்கு உதவுதல் (Helping Others)

எனும் மூன்று வகைமையின் கீழ்ச் சமூக உளவியல் ஆராய்கிறது. இக்கட்டுரை உள்ளார்ந்த ஈர்ப்பினை எடுத்துரைக்கிறது.

**உள்ளார்ந்த ஈர்ப்பு**

இஃது சமூக உளவியலின் ஒரு பகுதி மக்களிடையேயான ஈர்ப்பைப் பற்றி ஆராய்கிறது. ஒருவரை ஒருவர் எவ்வளவு விரும்புகிறார்கள் அல்லது வெறுக்கிறார்கள் என்பதோடு தொடர்புடைய இது இரண்டு நபர்களுக்கிடையில் செயல்படும் சக்தியாகக் கருதப்படலாம், அவர்களை ஒன்றாக ஈர்க்கவும் அவர்கள் பிரிவினை எதிர்க்கவும் முனைகிறது. ஒருவருக்கொருவர் ஈர்ப்பை அளவிடும் போது முன்கனிப்புத் துல்லியத்தை அடைய ஒருவர் ஈர்க்கப்பட்டவரின் குணங்களையும் ஈர்ப்பவரின் குணங் களையும் குறிக்க வேண்டும். ஈர்ப்பைத் தீர்மானிக்க

ஆளுமைகள், நிலைமைகள் இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பர் (Aronson, Elliot; Wilson Timothy D: Akert, Robin M. 2007. Social Psychology (6th Ed), New Jersey: Upper saddle River).

லாட் அண்ட் லாட், உள்ளார்ந்த ஈர்ப்பு என்பது "மற்றொரு மனிதகுலத்துடன் பலனளிக்கும் அனுபவங்களை அடிப் படையாகக் கொண்டது" என்கிறார் (Sharon S. Brehm, Saul M. Kassin. 1996. Social Psychology, New Jersey: Houghton Mifflin Company Boston Toronto, p.164). "பல அனுபவங்கள் நேர்மறையான, உணர்ச்சிபூர்வமான உறவு நிலையை உருவாக்குகின்றன. இதன் மூலம் அந்த நபருடன் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை பலப்படுத்துகிறது" எனச் சி.எல். குளோர் அன் பைரன் கூறுகிறார் (மேலது, ப. 164).

இரண்டு நபர்களுக்கிடையில் ஏற்படும் உள்ளார்ந்த ஈர்ப்பினை,

1. தனி மனிதப் பண்பு (Characteristics of the individuals)
2. பிறருடனான பண்பு (Characteristics of others)
3. தங்களுக்கிடையேயான இணக்கம் (Fit between us)
4. சூழலின் தாக்கம் (Situational influences)

எனும் நான்கு நிலையில் கண்டறிவர் (மேலது, ப.164).

பண்டைய காலத்தில் அரசர்கள் மக்கள் வாழ்க்கையைப் போற்றிப் பாதுகாத்துள்ளனர். புலி தன் குருளையைப் பேணிப் பாதுகாப்பது போல் அரசன் மக்களைப் பேணிப் பாதுகாத்துள்ளான் என்பதை,

**புலிபுறங் காக்குங் குருளை போல**
**மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப**
**(புறம். 42 : 10 - 11)**

எனும் அடிகள் விளம்புகின்றன. மக்கள், அரசன் விருப்பத்திற்கு மாறாக நடக்கவில்லை. அரசனும் மக்களின் தேவைக்கேற்ப நடந்து கொண்டான். எனவே, மன்னன் மக்களின் தந்தையாகவும் மலர்தலையுலகத்து உயிராகவும் இருந்துள்ளான். மக்கள், மன்னன் மீது கொண்ட பற்றால் அவனுக்கு ஏதேனும் துன்பம் வருமோ என அஞ்சியுள்ளனர். இதனை,

**காவல**
**குழவி கொள்பவரின் ஓம்புமதி**
**(புறம். 5 : 6 - 7)**
**நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே**
**மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்**
**(புறம். 186 : 1 - 2)**
**மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே**
**(புறம். 20 : 21)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன. வேந்தன் போரில் துன்புறுவானாயின் அவனது ஊரில் வாழ்வோர் அனைவரும் உணவு ஒழிந்து பசியில வாடியுள்ளனர் (புறம். 318). இஃது அரசனுக்கும் மக்களுக்குமிடையே இருந்த உள்ளார்ந்த ஈர்ப்பினைக் காட்டுகிறது.

### தனி மனிதப் பண்புகள் (Characteristics of the individuals)

சமூக உளவியல் அடிப்படையில் ஒரு மனிதனின் தனிப்பட்ட பண்புகளைக் கண்டறிய அறிஞர்கள், 1. சுய மரியாதை (Self Esteem), 2. சமூக நோக்கங்கள் (Social Motive), 3. சமூக இடர்பாடுகள் (Social Motives), 3. உள்ளார்ந்த எதிர்பார்ப்புகள் (Interpersonal Expeetations) எனும் நான்கு நிலைகளைக் கூறுகின்றனர் (மேலது, ப.166).

தமிழ்ச்சான்றோர், "பண்பெனப் படுவது பாடறித் தொழுகுதல்" என்பர் (நெய்தற்கலி. 16). பண்பாட்டை, பண்பாடு[1], பண்பாடு[2], பண்பாடு[3] எனக் கொள்வோம். பண்பாடு[1] என்பது ஒவ்வொரு தனிமனிதனின் பண்பாடாகும். அதாவது, ஒருவரின் சொந்தப் பண்பாடாகும்.

அது, அவரின் தனித்தன்மையுடைய (Idiosyncratie) பாங்குகளும் அவர் என்னவெல்லாம் கற்றுக்கொண்டுள்ளாரோ, புரிந்து கொண்டுள்ளாரோ, வெளிப்படுத்துகிறாரோ அவை அனைத்தையும் கொண்டதாகும். இரு தனிமனிதர்கள் ஒத்த பாங்கினைப் பெற்றிருக்கவில்லை என்பதே பண்பாடு என்பதன் இன்னொரு பொருளாகும்.

பண்பாடு[2] என்பது "நம் பண்பாடு" (Our Culture) ஆகும். இதில் நம் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டவை இடம்பெறுகின்றன. அதாவது "நம் பண்பாடு" என்னும் அமைப்பில் இரண்டுக்கும் மேற்பட்டவர்கள் இடம் பெறுவார்கள். வேறுவகையில் கூற வேண்டுமானால் பண்பாடு என்பது தனிமனிதர் என்ற வட்டத்தைக் கடந்து ஒரு சிறு குழு என்ற அளவில் அமைகிறது. இதனை ஒரு குடும்பத்தின் பண்பாடாகக் கருதலாம் ஒரு வகையறாவின் (பரம்பரை) அல்லது குலத்தின் பண்பாடாகவும் கருதலாம். இதில் உள்ளோரின் அளவு குறைவு. ஆதலால் ஒரு பெரும் பண்பாட்டில் பண்பாடு என்பது ஓர் உட்பண்பாடாக விளங்குகிறது அது முதன்மைப் பண்பாட்டில் ஒரு பகுதியாக விளங்குகிறது.

ஒவ்வொரு பண்பாட்டிலும் பல உட்பண்பாடுகள் இருக்கும். பண்பாடு[3] என்பது ஒரு சமூகத்தின் அல்லது பெரும்பகுதியின் (நாடு) முதன்மைப் பண்பாடாகும் பண்பாடு இன் கூறுகள் அனைத்துத் தனிமனிதர்களாலும் அனைத்து உட்குழு வினராலும் பகிர்ந்துகொள்ளப்படுவனவாக இருக்கும் புரிந்துகொள்ளக் கூடியனவாக இருக்கும். அதனாலேயே "பண்பாடு" என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது என்றும் கற்றுணரப்பட்டது என்றும் கூறப்படுகிறது (பக்தவத்சல பாரதி. 2018. பண்பாட்டு மானிடவியல், பக். 142 - 143).

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போர்க்களத்தில், "வெகுண்டு மேன்மேலும் வந்த புதிய வீரரைக் கண்டு வியப்பதும் இகழ்வதும் இலன். அவரைப் பற்றிப் பரந்த ஆகாயத்தின் கண் ஒலியெழ நிலத்தின் கண் கவிழ்த்துக் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இலன். இவ்வாறு செய்தோம் என்று தன்னை மிகுத்ததும் அதனினும் இலன்" (புறம்.77) என இடைக்குன்றூர் கிழார் வியந்தோது மிடத்துப் பாண்டியன் நெடுஞ்செழியனின் பண்புகள் வெளிப்படுகின்றன.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி சான்றோரின் சான்றாண்மையை, "தேவர் உண்ணும் உணவு கிடைப்பதாயிருந்தாலும் இனிதெனக் கருதி அதனைத் தனியாக உண் பவர் அல்லர். யாரோடும் வெறுப்பிலர். பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அது தீர்த்தல் பொருட்டு மடிந்திருப்பவரும் இல்லர். புகழ் வருமெனில் தம் உயிரையும் கொடுப்பர். பழி வருமெனில் அதனால் உலகம் முழுவதும் பெற முடியுமெனில் அத்தொழிலைச் செய்யார். மனத் தளர்ச்சி அற்றோர். தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் பெரியோர்" என இயம்புகிறார் (புறம்.182). இஃது சான்றோரின் தனி மனித பண்பினையும் அவர்கள் பிறருடன் தொடர்பு கொள்ளும் போது வெளிப்படும் பிறருடனான பண்பினையும் காட்டுகிறது.

**அதியமானின் ஒழுகலாறுகளைஔவையார்,**
**ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்**
**. . . . .**
**இன்னாய் பெருமநின் னொன்னா தோர்க்கே**
**(புறம். 94)**

என்று மொழிகிறார். ஊரிலுள்ள சிறு பிள்ளைகள் தனது வெள்ளிய கோட்டைக் கழுவுதல் காரணமாக நீர்த்துறையில் படியும் பெரிய களிறு அவர்க்கு எவ்வாறு எளிதாய், இனிதாய் இருந்துள்ளதோ அவ்வாறே அதியமானும் ஔவையார்க்கும் அவரொத்த புலவர்க்கும் இன்முகமும் இன்சொல்லும் உடையவனாய் இருந்துள்ளான். மற்றதனுடைய

அணைதற்கரிய மதம்பட்ட நிலைமை எவ்வாறு இன்னாதாம் அதுபோலப் பகைவர்க்கு இன்னாதவனாக இருந்துள்ளான். இங்கு ஔவை "நீ எமக்கு இனியனாய், ஒன்னாதார்க்கு இன்னா செய்பவனாய் உள்ளாய்" என்று சிறப் பிக்குமிடத்து அதியனின் நற்பண்புகள் வெளிப்படுகின்றன.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியை, "வேந்தே செஞ்ஞாயிற்றின் செலவும் அதன் பரிப்பும் மண்டிலமும் திக்கும் ஆகாயமும் என இவற்றின் அளவை நேரின்சென்று கண்டவரைப் போலத் தம் அறிவால் ஆராய்துரைப்போரும்உளர். அவர்களாலும் ஆராய்ந்தறியக் கூடாத அத்துனை அடக்க முடையனாய்க் கல்லைக்கவுளில் அடக்கி யுள்ள களிறு போல வலி முழுதும் தோன்றாதவாறு அடக்கிக்கொண்டு விளங்குகின்றாய்" என்று பாராட்டுகிறார் (புறம்.30). இதன்மூலம் நளங்கிள்ளியிடம் காணப்படும் அடக்கமாகிய பண்பினைக் காணமுடிகிறது.

வெளிமான் ஒரு சிறந்த கொடையாளி. ஒருமுறை பெருஞ்சித்திரனார் வறுமைத் துயர்போக்கும் முயற்சியராய் வெளிமானை யடைந்தார். அவன் துயிலும் வேலையில் இருந்ததனால் தன் தம்பி இளவெளிமானை அழைத்து "இவர்க்கு வேண்டும் பரிசில் நல்குக" எனப் பணித்தான். பெருஞ் சித்திரனார் வெளிமான் துஞ்சியபின் சென்று இளவெளிமானைக் கண்டார். புலவரை முன்பே அறிந்து வைத்தும் அறியாதவன் போல் நோக்கினான். புலவரைக் காண்பார்க்குளதாகிய முகமலர்ச்சி அவன்பால் உண்டாகவில்லை வருக எனச் சொல்லாது, இரப்பவர் என்பெறினும் கொள்வரெனக் கருதி ஈவாரைப் போலப் பொருள் சிறிது கொணர்ந்து கொடுத்தான். வெளிமானுக்குத் தம்பியென்னும் தன் தகுதியையோ பெருஞ்சித்திரனாரது வரிசை யையோ நோக்கினான் அல்லன். பெருஞ் சித்திரனார்க்குப் பேதுறவு பெரிதானதால்,

**எழுவினி நெஞ்சஞ் செல்கம் யாரோ**
**.. ..**
**வாயா வன்கனிக் குலமரு வோரே**
***(புறம். 207)***

எனப் பாடினார். "முகனழி பரிசிலைத் தாளிலாளர் விரும்பியேற்பர்" தாளாளர் அப்பரிசிலை விரும்பார். வருகென வரவேற்று நல்குவதுசிறிதாயினும்ஏற்றல்தக்கதுஅதுவே நம் வரிசைக்குத் தகுதி. உலகம் பெரிது பேணுவோரும் பலர். ஆதலால் நெஞ்சே நீ உள்ளம் உள்ளவிந்தடங்காமல் இனி எழு செல்கம். வன்கனிக்கு உலமருவோர் யாரும் இல்லை எனப் பெருஞ்சித்திரனார் மொழியுமிடத்து அவரது தன்மான உணர்வு வெளிப்படுகிறது. "பருகுவன்ன வேட்கையில்" என்றது அருகில் கண்டும் அறியார் போல் ஒழுகும் இளவெளிமானின் செருக்கினையும் பரிசிலரை இகழ்ந்து மறுக்கும் குறிப்பினையும் காணமுடிகிறது. இந்நடத்தையை எடுத்தோதி பெருஞ் சித்திரனார் பரிசிலை வெறுப்பதன் மூலம் அவரின் தனிமனித பண்புகளை அறிந்து கொள்ள இயல்கிறது.

தகடூரிலுள்ள அதியமான் நெடுமானஞ்சியைப் பெருஞ்சித்திரனார் காணச்சென்றார். பெருஞ்சித்திரனாரைக் காணாது தன் தகுதிக்கும் புலவரது வரிசைக்கும் ஏற்ற பரிசிலை நல்கினான். எம்மைக் காணது நல்கும் இப்பரிசிலை ஏற்பதற்கு "வாணிகப் பரிசில னல்லலேன்" (புறம். 208) எனக் கூறி மறுகிறார். என்னைப் பேணி, என் புலமையளவும் கண்டு பின்னர் நல்கும் பரிசில் மிகச்சிறிதாயினும் எமக்கு அஃது மிக்க இன்பம் தரும் எனப் பெருஞ்சி த்திரனார் மொழிந்தவிடத்து அவரின் தன்மான உணர்வுகள் வெளிப்படுகின்றன.

அருள் உணர்வு, கொல்லாமை, கள் ளுண்ணாமை, களவின்மை போன்றவை மனிதனுக்குரிய நற்பண்புகளாகும். புகார் நகரத்து வணிகரின் நற்பண்புகளைப் பட்டினப்பாலை,

**நீர்நாப் பண்ணு நிலத்தின் மேலு**
**கொலைகடிந்துங் களவுநீக்கியும்**
**(பட்டினப். 194 - 199)**

என விளம்புகிறது. "வணிகர் எவ்விடத்தில் வாழுவாரோ அவ்விடத்தில் வாழும் மீன்கள் துன்பமுறாது. வயல்களில் மாட்டு மந்தைகள் இன்பமாக வாழும். வணிகர் சுற்றத்தோடு சிறந்து இன்பமாக வாழ்பவர். இவர்களுக்குப் பகைவர் இல்லை. மீன்கள் யாவும் பரதவர் குடியிருப்பு முன்பு துள்ளுகின்றன. மாடுகள் வணிகர் குடில்களில் குறைவில்லாது பெருகுகின்றன" எனுமிடத்து வணிகர் கொலைகடிந்து, களவு நீக்கி, அன்பு மிகுந்த அருள் உணர்வோடு வாழ்ந்தனர் என்பது புலப்படுகிறது.

**பிறருடனான பண்பு (Characteristics of other)**

சமூகத் தொடர்பு அடிப்படையில் பிறருடனான பண்பில் தோற்றப் பொலிவு முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால், அது இன்னும் கணக்கிடப்பட வேண்டிய சக்தியாகும். நல்ல தோற்றம் ஒரு தனித்து வமான சமூக நன்மையை அளிக்கிறது. உடல் ரீதியாகக் கவர்ச்சிகரமான நபர் மக்களால் ஈர்க்கப்படுகிறார்கள் சாதகமாக நடந்து கொள்கிறார்கள் என்பது கெட்பீல்டு, ஸ்பேர்சரின் விளக்கமாகும் (Sharon S. Brehm, Saul M. Kassin. 1996. Social Psychology, New Jersey: Houghton Mifflin Company Boston Toronto, p. 178). பெயின்கோல்டு, "அழகாக இருக்கும் நபர்கள் குறிப்பிடத்தக்க சமூக விளிம்பைக் கொண்டுள்ளனர். அவர்கள் குறைந்த தனிமையானவர்கள், குறைவான சமூக ஆர்வமுள்ளவர்கள் மிகவும் பிரபலமானவர்கள், அதிக பாலியல் அனுபவம் வாய்ந்தவர்கள், சமூகத் திறமை கொண்டவர்கள்" என்கிறார் (மேலது, ப.178).

பிறருடனான பண்பில் ஆளுமை மற்றும் மனநிலை முக்கிய பங்கு வகுக்கிறது. "வயது, கல்வி, இனம், மதம் மற்றும் சமூகப் பொருளாதார நிலை போன்ற பரவலான மக்கள்தொகை பண்புகளில் ஒன்றாகச் செல்வோர் ஒருவருக்கொருவர் ஒத்திருக் கிறார்கள்" என வாரன் கூறுகிறார் (மேலது, ப. 185).

பாண்டியன் நெடுஞ்செழியனைக் கண்ட குடபுலவியனார், "செழிய, நின் மார்பு புலியைப்படுக்கும் வேட்டுவன் கல்லிடத்தே சேர்த்திய அடாரையும் ஒக்குமென்று கருதிப் புல்லினேன். எம் போல்வார்க்கு இன்பமும் பகைவர்க்குத் துன்பமும் பயப்பது நின் மார்பு" எனப் பகர்கிறார் (புறம்.19). போர்க் களத்தில் வன்மையைக் காட்டிய நெடுஞ்செழியனது மார்பு, காண வந்த தம்மை அன்போடு வரவேற்றுக் கட்டித் தழுவிக் கொண்ட மென்மையைப் புலவர் மொழிந்தவிடத்துப் பாண்டியனின் தோற்ற பொலிவும் பிறருடனான பண்பினையும் காணமுடிகிறது.

கபிலர், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனை,

**பெரும தாமே நல்லவர்க்**
**காரணங் காகிய மார்பிற் பொருநர்க்**
**கிருநிலத் தன்ன நோன்மைச்**
**செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே**
**(புறம். 14 : 16 - 19)**

என்று கூறுகிறார். ஆடவர் மார்பகலம் மகளிர்க்குப் பொறுத்தற்கரிய வேட்கைத் துன்பத்தை நல்கும் என்பதால் "ஆரணங்காகிய மார்பு" என்றார். "மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்" என அகநானூறும் மொழிகிறது (அகம்.22). போரில் மேம்பட்டு விளங்கிய சேரனை, "செருமிகு சேஎய்" என்கிறார் கபிலர்.

பண்டையக் கால வணிகர்கள் பொருள் ஈட்டும் நோக்கத்தோடு மட்டும் வணிகத் தொழிலை நடத்தவில்லை. உண்மை பேசும் பண்புடையராகத் திகழ்ந்துள்ளனர். பொய் பேசுவதை நாணுதற்குரியது எனக் கருதியுள்ளனர். பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும் தம்முடைய பண்டங்களைக் குறைத்துக் கொடாமலும் நடுவு நிலைமையோடும் உண்மையோடும் வணிகம் செய்துள்ளனர் (பட்டினப். 206 - 210). அறத்தின் வழிப்பட்டு ஒழுகிய வணிகரை மதுரைக்காஞ்சி, "அறநெறி பிழையா தாற்றி னொழுகி" எனக் குறிப்பிடுகிறது (மதுரைக். 500). பல்வேறு மக்களோடு இணையக்கூடிய வணிகர், நேர்மையான முறையில் நடந்தமை அவரின் பிறருடனான பண்பினைக் காட்டு கிறது. கரிகாலன் தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தியவன் (பொருநர். 132). இவன் தம்மை நாடி வந்தப் புலவர் முதலியோருக்குப் பரிசில் வழங்கி அவரை வழியனுப்பும்போது அவர்பின் ஏழடி நடந்து செல்லும் பண்புடையவனாக இருந்துள்ளான் (பொருநர். 166). இஃது தமிழரின் தலையாயப் பண்பினைக் காட்டுகிறது.

### தங்களுக்கிடையேயான இணக்கம்

ஈர்ப்பில் இரண்டு நபர்களுக்கிடையேயான பொருத்தம் தனிமைப்படுத்தலில் அவர்களின் குறிப்பிட்ட, தனிப்பட்ட பண்புகளைவிட அதிக விளைவைக் கொண்டிருக்கக்கூடும் (Sharon S. Brehm, Saul M. Kassin. 1996. Social Psychology, New Jersey: Houghton Mifflin Company Boston Toronto, p.197).

சான்றோர்கள்தகுதிவாய்ந்தஅன்புமிக்கோர் இணக்கத்தையே விரும்பியுள்ளனர். "பொன்னும் பவளமும் முத்தும் மணியும் தூரமான வெவ்வேறிடங்களில் பெறப் பட்டாலும் கோவையாக நல்ல அணிகலங்களைச் செய்யும் காலத்து ஓரிடத்தில் வந்து கூடும். அதுபோலவே சான்றோர்கள் வேறுவேறு நாட்டிற்கு உரியோராயினும் எந்நாளும் ஒரு வழிப்பட்டு ஒன்று சேர்ந்து இணங்கியிருப்பர்" (புறம்.218).

சோழநாட்டுப் பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனிடத்து மதுரைச் சான்றோரான நக்கீரனார்க்குப் பேரன்பும் பெருநட்பும் உண்டு. ஒருமுறை நக்கீரர் பெருஞ்சாத்தனைக் காணச் சென்றபோது, இவரை இனிது வரவேற்றுச் சீரிய உணவும் மிக்க பெருஞ்செல்வமும் வழங்கிச் சிறப்பித்தான். இத்தகைய பெருஞ் சிறப்புகளைச் செய்தும் பெருஞ்சாத்தன் உள்ளம் அமையானாய் தன் மனைவியை வருவித்து அவளுக்கு நக்கீரரைக் காட்டி, இவரை என்னைப் போல் போற்றுக என்று பணித்தான் (புறம்.395). இஃது மன்னனுக்கும் புலவனுக்கும் இடையே இருந்த சான்றோர் இணக்கத்தைப் புலப்படுத்துகிறது.

கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்த கோப்பெருஞ் சோழன் மீது பேரன்புடையவர். சோழன் வடக்கிருந்து உண்ணாநோன்பு கொண்டு உயிர் துறக்கக் கருதியதைக் கேள்வியுற்றார். உண்ணா நோன்பால் உடம்பு வாடிப் பேசும் ஆற்றலின்றி உயிரிழக்கும் நிலையில் கோப்பெருஞ்சோழன் இருக்குங்கால் பூதநாதனார் அவ்விடம் சென்றார். அங்கே சோழனுடன் சான்றோர் பலர் வடக்கிருந்ததையும் கண்டார். தாமும் முற்படச் சென்று அவனொடு வடக்கிருக்க இயலாது போனதை எண்ணி வருந்தினார். சோழன் பேச்சு மூச்சின்றி இருக்கும் நிலை அவருள்ளத்தைப் பெரிதும் வாட்டிற்று. கையறவு மிகுந்தநிலையில்,

***உள்ளாற்றுக் கவலைப் பள்ளி நீழல்***
***முழூஉ வள்ர முணக்கு மள்ள***
***புலவுதி மாதோ நீயே***
***பலரா லத்தைநின் குறியிருந் தோரே***
***(புறம். 219)***

எனப் பகர்கிறார். "வேந்தே நின் கருத்துப் படியே சான்றோர் பலர் வடக்கிருப்ப அவருள் ஒருவனாய் யானும் முற்பட வாராமையால் என்னோடு புலந்து வாய்பேசாது இருக்கின்றாயோ" என வருந்திப் புலம்புமிடத்து இருவர்க்குமான நட்பு நிலையும் சான்றோர் இணக்கமும் வெளிப்படுகின்றன.

அதியமான் ஔவையார்பால் மிக்க விருப்பும் மதிப்பும் உடையவன். ஔவை, இவனுக்கு நல்லிசைப் புலவராகவும் தூது வராகவும் அரசியல் ஆலோசகராகவும் பரிசிலராகவும் விளங்கினார். அதியனுக்கும் ஔவைக்குமிடையே இருந்த நல் இணக்கத்தை,

***சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே***
***. . .***
***புலவு நாறு மென்றலை தைவரு மன்னே***
***(புறம். 235 : 1 - 9)***

எனும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

அதியமான் நெடுமான் அஞ்சியின் மறைவிற்கு வருந்தும் ஔவையார், அவன் மார்பில் தைத்த வேல் புலவர்களின் நாவில் தைத்த வேலாகக் கருதி வருந்தியதை,

***அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்***
***இனிப், பாடுநரு மில்லைப்***
***பாடுநர்க்கொன் றீகுநருமில்லை***
***(புறம். 235 : 13 - 17)***

எனும் அடிகள் புலப்படுத்துகின்றன.

குட்டுவன்கீரனார், "பாடுவார்க்குக் குறையறக் கொடுக்கும் ஆய் அண்டிரன் இறந்ததாதல் புலவர்கள் வாடிய பசியராய்ப் பிறருடைய நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றமையைப்" பாடியுள்ளார் (புறம். 240). புலவர்கள் வள்ளல்கள் மறைவிற்கு வருந்திப்பாடும் பாடல்களைக் கையறு நிலைப் பாடல்கள் என்பர். இதனை,

***கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ***
***ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்***
***(தொல். பொருள். புறத். நூ.19)***

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**சூழலின் தாக்கம்**

அருகாமை சமூகத் தொடர்புகளுக்கு மேடை அமைக்கிறது. ஆனால், அவற்றின் தரத்தினைத் தீர்மானிக்கவில்லை. தனிப்பட்ட இட விருப்பத்தேர்வுகள், அச்சங்கள் தவறான எண்ணங்களின் நுட்பமான குறிகாட்டியாக இருக்கலாம். நமது தனிப்பட்ட இடத்தின் மீறல்கள் மற்றவர்களுக்கான நமது எதிர்வினைகளைத் தீவரப்படுத்துகின்றன (மேலது, ப.197).

போர்க்களத்தில் பெரிய போரைச் செய்யும் மறவன் ஒருவன் தன் தோழன் பிறிதொரு புறத்தே பகைவர் வளைத்துக் கொள்ள அவர் நடுவே நின்று பொருவது கண்டான். உடனே அவற்குத் துணைசெய்யக் கருதி நெடிய வேலைக் கையிலேந்தி, பகைவர் கறுவுகொண்டு சூழ்ந்த திணிநிலையிலுள்ள மறவர் அஞ்சி அலறிச் சிதையுமாறு விரைந்து செல்லலுற்றான். அது கண்ட பகைவர் அவனைத் தடுத்தற்கு முயன்றனர். அவன் தடைப்படாது சென்று தோழனுக்குத் துணையானதை,

***தொடர்கொள் யானையிற் குடர்கா றட்பக்***
***கன்றமர் கறவை மான***
***முன்சமத் தெதிர்ந்ததன் றோழற்கு வருமே***
***(புறம். 275 : 7 - 9)***

என்ற அடிகள் விளம்புகின்றன. பகைவரால் வளைத்துக் கொள்ளப்பட்ட தன் தோழனைக் காப்பதில் பின்னோக்காத பெருமித

நடையும் வழியிடையுள்ள இடையீடுகளை மதியாது செல்லும் மாண்பும் உடையன் என்பதற்கு, "தொடர்கொள் யானை" என்ற உவமை கூறப்பட்டது. தன் கன்று பிறர் கைப்பட்டிருக்கக் காணும் கறவை அவர்பால் விரைந்து செல்வது போலத் தோழன்பால் சென்றான் என்பதற்கு, "கன்றமர் கறவை" உவமமாகக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் மறவன் தன் தோழன் மீது வைத்துள்ள அன்பும் பற்றுதலும் வெளிப்படுகிறது. இஃது போர்க் களச்சூழல் தாக்கத்தினால் வெளிப் பட்டதாகும்.

## தொகுப்புரை

சமூகத் தொடர்பு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு இடையிலான ஒரு சமூகப் பரிமாற்றமாகும். இத்தொடர்புகள் சமூகக் கட்டமைப்பிற்கு அடிப்படையாக விளங்குகின்றன. சமூகக் கட்டமைப்புகள் மற்றும் கலாச்சாரங்கள் சமூகத் தொடர்புகளின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன. ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதன் மூலம் மக்கள் வாழ விரும்பும் விதிகள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை வடிவமைக்கிறார்கள். சமூகத் தொடர்புகளின் ஆய்வு என்பது சமூகவியல் பாடங்களில் ஒன்றாகும்.

உள்ளார்ந்த ஈர்ப்பு என்பது சமூக உளவியலின் ஒரு பகுதி மக்களிடையேயான ஈர்ப்பைப் பற்றி ஆராய்கிறது. ஒருவரை ஒருவர் எவ்வளவு விரும்புகிறார்கள் அல்லது வெறுக்கிறார்கள் என்பதோடு தொடர்புடையதாகவும் இரண்டு நபர்களுக்கிடையில் செயல்படும் சக்தியாகவும் விளங்குகிறது.

மன்னன் மக்களின் தந்தையாகவும் மலர் தலையுலகத்து உயிராகவும் இருந்துள்ளான். மக்கள், மன்னன் மீது கொண்ட பற்றால் அவனுக்கு ஏதேனும் துன்பம் வருமோ என அஞ்சியது மக்களுக்கும் மன்னனுக்குமிடையே இருந்த உள்ளார்ந்த ஈர்ப்பினைக் காட்டுகிறது.

அதியமானை ஔவை, "நீ எமக்கு இனியனாய், ஒன்னாதார்க்கு இன்னா செய்பவனாய் உள்ளாய்" என்று சிறப்பிக்குமிடத்து அதியனின் நற்பண்புகள் வெளிப்படுகின்றன. அதியமானைக் காணச் சென்ற பெருஞ்சித்திரனாருக்கு அதியன் புலவரைக் காணாது தன் தகுதிக்கும் புலவரது வரிசைக்கும் ஏற்ற பரிசிலை நல்கினான். எம்மைக் காணது நல்கும் இப்பரிசிலை ஏற்பதற்கு "வாணிகப் பரிசிலனல்லலேன்" எனக் கூறி மறுகிறார். என்னைப் பேணி, என் புலமையளவும் கண்டு பின்னர் நல்கும் மிகச்சிறியப் பரிசில் மிக்க இன்பம் தரும் எனப் பெருஞ்சித்திரனார் மொழிந்தவிடத்து அவரின் தன்மான உணர்வுகள் வெளிப்படுகின்றன. இவ்விரு செய்திகள் மூலம் அதியனின் இருவேறுபட்ட நடத்தைகளை அறிய முடிகிறது.

கரிகாலன், தம்மை நாடி வந்த புலவர் முதலியோருக்குப் பரிசில் வழங்கி அவரை வழியனுப்பும்போது அவர்பின் ஏழடி நடந்து செல்லும் பண்புடையவனாக இருந்துள்ளான். இச்செயல் கரிகாலனின் பிறருடனான தொடர்பினையும் அவனது நற்பண்பினையும் காட்டுகிறது.

போர்க்களத்தில் மறவன் ஒருவன், பகைவரால் வளைத்துக்கொள்ளப்பட்ட தன் தோழனைக் காப்பதில் பின்னோக்காத பெருமித நடையும் வழியிடையுள்ள இடையீடுகளை மதியாது செல்லும் மாண்பு உடையவனாக விளங்கியமை போர்க் களச் சூழல் தாக்கத்தினால் வெளிப்பட்ட நடத்தையைக் காட்டுகிறது.

## துணைநூற்பட்டியல்

1. ஆர்கைல் எம். (2017). சமூக தொடர்பு: செயல்முறை மற்றும் தயாரிப்புகள், ரூலெட்ஜ்.
2. அரோன்சன் எலியட், வில்சன் திமோதி டி, அகெட் ராபின் எம். (2007). சமூக உளவியல் (6 வது எட்), நியூ ஜெர்சி: அப்பர் சேடில் ரிவர்.

3. பக்தவத்சல பாரதி. (2018). பண்பாட்டு மானிடவியல், புத்தாநத்தம்: அடையாளம்.
4. ஷரோன் எஸ். ப்ரெம்., சவுல் எம். காஸ்ம். (1996). சமூக உளவியல் (மூன்றாம் பதிப்பு), பாஸ்டன் டொராண்டோ: ஹங்டன் மிவ்வின் கம்பெனி.
5. துரைசாமிப்பிள்ளை ஔவை சு. (2017). *புறநானூறு மூலமும் உரையும் (பகுதி 1, 2)*, சென்னை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.
6. சோமசுந்தரனார் பொ. வே. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்,* சென்னை, கழக வெளியீடு.
7. பரமே, செ.ரா. (2018). *சமூக உளவியல்,* சென்னை: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.
8. *வாழ்வியற்களஞ்சியம்*(தொகுதி எட்டு), தஞ்சாவூர், தமிழ்ப்பல்கலைக்கழகம்.